# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

### O.S.148/2019

## CNR.No.TNCB19000

Date: 18.06.2025 DW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | வேணிகலா | **வயது** | 59 |
| **த/பெ** | சுந்தரமூர்த்தி | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | புஜ்ஜங்கனூர் | **மாவட்டம்** | கோயமுத்தூர் |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 18th June 2025

பி.வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கிரைய பத்திரம் மற்றும் உயில் ஆவணம் பதிவு செய்த பின்னிட்டு அனைவரும் ஒன்றாக இருந்து அனைத்து பத்திரங்களையும் வாங்கிக்கொண்டு ஒன்றாக சென்றோம் என்றால் சரிதான். உயில் மற்றும் கிரைய பத்திரம் யாருடைய உடைமையில் இருந்தது என்றால் உயில் எனது மாமனாரிடமும் கிரைய பத்திரம் எங்களிடமும் இருந்தது. உயிலில் கண்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். என் மாமியார் திருமக்காள் எப்போது இறந்தார் என்றால் தேதி தெரியாது. 1994 ம் ஆண்டில் இறந்தார். உயில் மற்றும் கிரைய பத்திரம் தயாரிக்கும்போது நானும் எனது மாமனாரும் மற்றும் எனது கணவரும் உடன் இருந்தோம்.

உயில் மற்றும் கிரைய பத்திரத்தில் கண்ட சங்கதிகளை யார் சொன்னார் என்றால் எனது மாமனார் சொல்லி எழுதப்பட்டது. உயில் பத்திரம் கையால் எழுதப்பட்டதா அல்லது தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் தட்டச்சு செய்யப்பட்டது. உயில் பத்திரம் சொல்ல சொல்ல தட்டச்ச செய்யப்பட்டதா என்றால் நான் வெளியில் இருந்தேன் எனது கணவரும் மாமனாரும் அறையில் இருந்தார்கள். பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு எனது மாமனார் கையெழுத்து செய்தது என்ற விபரம் அவர்கள் வெளியே வந்த பிறகுதான் சொல்லி எனக்கு தெரியும் என்றால் சரிதான். உயில்

எத்தனை பக்கங்களில் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் இரண்டு பக்கம். பத்திரங்கள் தயார் செய்யப்பட்டதும் நானும் எனது கணவரும் மாமனாரும் பத்திர அலுவலகத்திற்கு சென்றோம். உயில் பதிவு செய்யும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் காலையில் பதிவு அலுவலகத்தில் கொடுக்கப்பட்டது.

பத்திர அலுவலகத்தில் வைத்து எனது மாமனார் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. எந்த இடத்தில் வைத்து கையெழுத்து செய்தார் என்றால் பத்திரத்திலும் உயிலிலும் கையெழுத்து செய்தார். பதிவு அலுவலத்தின் உள்ளே கையெழுத்து செய்யப்பட்டது. என்னிடம் உயில் முழுமையாக எப்போது வந்தது என்றால் அன்றைய தினமே வந்தது. அந்த உயிலில் எனது மாமனார் எத்தனை கையெழுத்து செய்தார் என்றால் இரண்டு கையெழுத்து செய்தார். எனது மாமனார் உயிருடன் இருக்கும் வரை அவருக்கும் அவர் இறந்த பிறகு எனது மாமியாருக்கும் அவர் எந்த வில்லங்கமும் ஏற்படுத்தாமல் அதற்கு பிறகு எனது கணவர் சுந்தரமூர்த்திக்கு வரவேண்டியது என்று எழுதப்பட்டுள்ளது.

உயில் எழுதும்போது எனது மாமனாருக்கு எனது கணவர் மட்டுமே வாரிசு. எனது மாமனார் உயில் எழுதி வைக்காமலேயே இறந்திருந்தால் அவரது சொத்துக்கள் எனது கணவருக்கு வந்து சேரும். அவ்வாறு எனது கணவருக்கு மட்டுமே சேரவேண்டியிருந்தால் உயில் எழுத வேண்டிய அவசியம் இல்லை என்றால் தேசப்ப கவுடரின் மகன்களுக்கு சொத்து போகக்கூடாது என்பதற்காகதான் உயில் எழுதி வைத்தார். எனது மாமனார் இறந்த பிறகு சொத்தை எனது கணவர் அனுபவித்தார். எனது மாமனார் உயிருடன் இருக்கும்போது 12.02.1973 ம் தேதி உயில் எழுதி பதிவு செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

அந்த உயில் சம்பந்தமாக எனது கணவருக்கு எழுதி வைத்த உயில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் அந்த மாதிரி இல்லை. இன்றைய தேதி வரை அசல் உயில் பத்திரம் என்னிடம் உள்ளது. அதை படித்து பார்த்து 12.02.1973 ம் தேதி எனது மாமனார் உயில் எழுதி வைத்திருந்ததாக வாசகம் எழுதப்படவில்லை என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது கணவர் 1991ம் ஆண்டில் எந்த சொத்தை வங்கியில் அடமானம் வைத்தார் என்றால் கிரைய பத்திரத்தில் கண்ட சொத்தை அடமானம் வைத்தார். கிரைய பத்திரம் எனக்கும் எனது கணவருக்கும் சேர்த்து கூட்டாக எழுதப்பட்டது என்றால் சரிதான். எனது கணவருக்கும் எனக்கும் கூட்டாக

ஒதுக்கப்பட்ட பத்திரத்தை பொறுத்து பாகப்பிரிவினை செய்து கொண்டோமா என்றால் இல்லை. 03.04.1989 ல் எனது கணவர் ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றும் அந்த சொத்தை பொறுத்து எனது கணவருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட 5 செண்ட் சொத்தை தான் எழுதி வைத்தார் என்றால் சரிதான்.

எதன் அடிப்படையில் எனது கணவருக்கு தனிப்பட்ட சொத்து என்றால் எனது மாமனார் எனது கணவருக்கு எழுதி வைத்த சொத்தில் எனக்கு எழுதி எனது கணவர் எழுதி வைத்தார். இந்த வழக்கின் 1, 2 பிரதிவாதிகள் சுப்பைய கவுடர் மகன் காணிச்சாமியின் மனைவி மற்றும் மகள்கள் மற்றும் பிரதிவாதிகள் 6 முதல் 9 துரைசாமியின் வாரிசுகள் ஆவார்கள் என்றால் சரிதான். உயில் எழுதும்போது காணிச்சாமி உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். உயிலில் காணிச்சாமிக்கு ஏன் இந்த சொத்தை கொடுக்கவில்லை என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காணிச்சாமி பாகம் செய்து கொண்ட பிறகு அவருக்கு பாத்தியப்பட்ட 3 செண்ட் ஐ பொறுத்து மணிக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான்.

அந்த சொத்தை பொறுத்து வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு இடையே அசல் வழக்கு எண்.126/2016 என்ற வழக்கு மாவட்ட உரிமையிய ல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் தாவா சொத்தின் ஒரு பகுதியை எனது சகோதரர் ஜெய் பகவான் என்பவருக்கு தான செட்டில்மெண்ட் மூலம் கொடுத்து விட்டேன் என்றால் சரிதான். ஜெய் பகவானுக்கும் வாதிகளுக்கும் இடையே அசல் வழக்கு எண்.272/2016 என்ற வழக்கு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். மணிக்கு கிரையம் செய்து கொடுத்த சொத்தை நானும் எனது மகள்கள் மற்றும் சகோதரர்கள் இடையூறு செய்ததாக வாதிகள் அசல் வழக்கு எண். 282/2016 என்ற வழக்கை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் அந்த சொத்து என்னுடைய இடத்தில் வீடு கட்டியதால்தான் இந்த பிரச்சினை வந்தது.

மணி 1988 ம் ஆண்டில் கிரைய ம் பெற்று வீடு கட்டினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எத்தனை வருடத்திற்கு முன்பு வீடு கட்டினார் என்றால் சரியாக எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்த 2016 ம் வருடத்திற்கு எத்தனை

வருடத்திற்கு முன்பு வீடு கட்டினார் என்றால் சுமார் 10, 15 வருடம் இருக்கும். அந்த சமயத்தில் எனது இடத்தில் வீடு கட்டியதாக சொல்கிறேனா என்றால் சரிதான். அப்போதிலிருந்தே எனக்கும் அவர்களுக்கும் பிரச்சினை என்றால் சரிதான். அந்த சமய த்தில் நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மாமனார் எனக்கும் எனது கணவருக்கும் கிரைய பத்திரம் எழுத வில்லை என்றாலும் எனது கணவருக்கு உயில் எழுதி தரவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் வாதிகள் சுப்பைய கவுடரின் மனைவி திருமக்காளின் வாரிசுகள் என்ற அடிப்படையில் தாவா சொத்தில் 1/9 பங்கு பாகம் பெற தகுதியுடையவர்கள் என்றால் சரியல்ல. தாவா அனுமதிக்க வேண்டியது என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL
Digitally signed by K PALANIVEL
Date: 2025.06.18 19:23:20 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.